2 9 நவ 2013

29 NOV 2013
CHEPAUK
CHENNAI - 600 005.

சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று "ஜன்னல் ஓரம்" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை

அரசாணை (டி) எண்.650

36381

நாள்: 28.11.2013
விஜய, கார்த்திகை,12
திருவள்ளுவர் ஆண்டு, 2044

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. வணிகவரி ஆணையர் கடித எண்.சட்டக்குழு–4/34365/2013, நாள் 21.11.2013, தேர்வுக்குழு எண். 90/2013–2014.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. வணிகவரி ஆணையர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், "ஜன்னல் ஓரம்" தமிழ் திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களில், ஓர் அலுவல் சார்ந்த உறுப்பினர் மட்டும் இத்திரைப்படம் கேளிக்கை வரிவிலக்கு பெற தகுதியானது அல்ல எனவும், மற்ற ஐந்து உறுப்பினர்கள் இத்திரைப்படம் கேளிக்கை வரிவிலக்கு பெற தகுதியானது எனவும் பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

3. "ஜன்னல் ஓரம்" திரைப்படத்தை பார்வையிட்ட அலுவல் சார்ந்த உறுப்பினர் திருமதி வி.ராதா, இணை ஆணையர் (வணிகவரி), சென்னை (வடக்கு), சென்னை–6 அவர்கள் தனது பரிந்துரையில், "இத்திரைப்படம் அரசாணையின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு "U" சான்றிதழ் பெற்றிருந்தாலும், திரைப்படத்தின் பெரும்பான்மையான வசனங்கள் தமிழில் இடம் பெற்றுள்ளன என்றாலும், திரைப்படத்தின் முற்பகுதி வசனங்களில் ஆபாசம் மிகுந்துள்ளது என்பதாலும், காதலிக்காக நண்பனை தலையில் அடிப்பது, மலையிலிருந்து தள்ளிக் கொல்வது என வன்முறை மிகுந்துள்ளது என்பதாலும், திரைப்படத்தின் தலைப்பில் "ஜன்னல் " என்ற வேற்று மொழிச் சொல் கலந்துள்ளதால், திரைப்படத்தின் தலைப்பை தமிழில் உள்ளதாகக் கொள்ள இயலவில்லை என்பதாலும், சுய நலத்துக்காக நண்பனை பலி வாங்குவதாக அமைந்துள்ள கதைக் கரு தமிழ் மொழி மற்றும் பண்பாட்டின் வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லை என்பதாலும், இத்திரைப்படம் கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியானது அல்ல" என பரிந்துரை செய்துள்ளார்.

4. இந்நேர்வில், மேற்காணும் அலுவல் சார்ந்த உறுப்பினர் திருமதி.வி.ராதா, இணை ஆணையர் (வணிகவரி), சென்னை (வடக்கு), சென்னை–6 அவர்கள் மட்டும், இத்திரைப்படத்தின் தலைப்பில் "ஜன்னல்" என்ற வேற்று மொழி சொல் கலந்துள்ளதால், திரைப்படத்தின் தலைப்பை தமிழில் உள்ளதாக கொள்ள இயலவில்லை என தெரிவித்துள்ளார். ஆனால் அலுவல் சார்ந்த உறுப்பினர் திரு.வே.கூழுச்சாமி, துணைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை அவர்கள், "ஜன்னல் ஓரம்" என்பது வடமொழி சொல் என்றாலும் இது வழக்கு மொழியாக உள்ளதால் "ஜன்னல் ஓரம்" தமிழ் மொழியே என்று கருதலாம் என தெரிவித்துள்ளார்.

5. மேற்கண்ட சூழ்நிலையில், "ஜன்னல் ஓரம்" என்ற திரைப்படத்தின் பெயரிலுள்ள சொற்கள் வழக்கில் உள்ள தமிழ் சொற்கள் என்பதால், கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின், பார்வையிட்ட பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை ஏற்று, தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் பிரிவு 8, உட்பிரிவு 2ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, "ஜன்னல் ஓரம்" தமிழ் திரைப்படத்திற்கு ஆணையிடப்படும் நாள் முதல் கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
சிறப்புநிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா பண்பாட்டு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/11/2013

பிரிவு அலுவலர்.